
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

## புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 1 ஜனவரி 2011

தனிப் பிரதி ரூ. 8/-



## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ................................ 1
2. கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுதல் ........... 9
3. பெண்கள் பகுதி .................................. 14
4. வாலிபர் பகுதி ................................ 17
5. சிறுவர் பகுதி ................................ 20
6. துருவின் சாட்சி .................................. 22
7. தெரிந்து கொள்ளுங்கள் ....................... 25
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 26
9. பூரண சற்குணராயிருங்கள் .................. 31


## BIBLE MEDITATION

**TV PROGRAM**

Monday - TAMILAN TV
Time : 7.00 am.

Tuesday - IMAYAM TV
Time : 6.15 am.

Saturday - TAMILAN TV
Time : 7.15 am.

**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு**

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- எங்களின் இலக்கியப் பணியை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கவும்.

- ஆசிரியர்

# வடசென்னை கிறிஸ்துவின் சபையார் நடத்தும் 25-ம் வேதாகமக் கருத்தரங்கம்

இடம் : **கமலம்மாள் கல்யாண மண்டபம்,**
பெரம்பூர் மார்க்கெட் அருகில், சென்னை – 600 011.

நாள் : **26.01.2011 புதன்கிழமை**

நேரம் : **காலை 9:30 – மாலை 5: 00 மணி**

**கருத்தாளர்கள்**

| | |
|---|---|
| **சகோ. E.Z.S. ராஜநாயகம்,** | காங்கேயம் |
| **சகோ. V. தானியேல் துரைராஜன்,** | திருச்சி. |
| **சகோ. V. ஆசீர்வாதம்,** | திருவொற்றியூர், சென்னை. |
| **சகோ. F. வில்லியம்ஸ்,** | பெரம்பூர், சென்னை. |

மெய் சத்தியத்தை அறிந்து கொள்ள அன்போடு அழைக்கிறோம்.

**தொடர்புக்கு : 99622 10708**

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 JANUARY - 2011 Issue - 1


ஆசிரியர் உரை

# யாருக்குத் தெரியும்?

"யாருக்குத் தெரியும்?" என்ற கேள்வி பொதுவாக இரண்டு சூழ்நிலையில் கேட்கப்படும். முதலாவது, ஒரு விஷயம் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்வதற்காக. இரண்டாவது ஒரு காரியம் யாருக்குமே தெரியாது என்பதை நாசுக்காக எடுத்துரைப்பதற்காக. இப்புதிய வருடத்தின், துவக்க மாதத்தில் கேட்கப்படும் நமது, "யாருக்குத் தெரியும்?" என்ற கேள்வி, இவ்விரண்டில், இரண்டாவது வகையைச் சார்ந்தது.

இப்பொழுது, நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் நூல் எது என்றும், இக்கேள்வி எந்த சந்தர்ப்பத்தில் யாரால், யாரிடம் கேட்கப்பட்டது என்றும் தெரிந்து கொள்வோமா?

பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியுள்ள 66 நூல்களுள், தனித்துவம் வாய்ந்தது என்று கருதப்படும் தகுதி எஸ்தர் சரித்திர நூலுக்கு உண்டு. ஆம், பத்து அதிகாரங்களைக் கொண்ட இப்பழைய ஏற்பாட்டு நூலில், தேவன், கர்த்தர் போன்ற வார்த்தைகள் ஓரிடத்தில் கூட இல்லை. இத்தனைக்கும் தேவனுடைய, முழுமையான பாதுகாப்பு அவருடைய பிள்ளைகள் மீது உண்டென்பதையும், அவரின் தெய்வீக வழிநடத்துதல், அவருடைய பிள்ளைகளுக்கு கிடைக்கிறதென்பதையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தும் நூல் இது. தேவனுடைய பெயர்தான் இந்நூலில் இல்லையேயொழிய. அவருடைய தாங்கி வழி நடத்தும் கரம் இதில் இல்லாமல் போகவில்லை. சாலொமோனின் உன்னதப்பாட்டு நூலிலும், தேவன், கர்த்தர் போன்ற வார்த்தைகள் இல்லையென்று நாம் சொன்னாலும், இவ்விரண்டும் அடிப்படையிலே வெகு வேறுபாடு கொண்டவை.

இந்நூல், நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்து பிறப்பதற்கு, சுமார் 480 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டுள்ளது. அன்றைய உலகின், பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த சாம்ராஜ்யம் பெர்சியா. இந்நூலின் காலத்தில், பெர்சியாவின் ஏக சக்கரவர்த்தியாக இருந்தவன் ராஜாவாகிய அகாஸ்வேரு. இந்தியா முதல் எத்தியோப்பியா வரையிலான 127 நாடுகளுக்கு அவன் சக்கரவர்த்தியாக இருந்துள்ளான். இவன் காலத்தில் தான் நமது கேள்விக்கான சம்பவம் நடந்துள்ளது. இது நடந்த இடமாகக் கருதப்படுவது, அவனுக்கு சொந்தமான அரண்மனைகளுள் ஒன்றான சூசான் அரண்மனை. இது, பெர்சியா மாமன்னர்களின் மாரிக்கால வாசஸ்தலம். இவ்வரண்மனை பாபிலோனுக்கு கிழக்கே சுமார் 350 கி.மீ. தொலைவில் இருந்துள்ளது.

ராஜாவாகிய அகாஸ்வேரு, தன்னுடைய ராஜ்ய பாரத்தின் மூன்றாம் வருஷத்தில், தனது பரந்த எல்லைக்குட்பட்ட எல்லா தேசங்களின் அதிபதிகளையும், பிரபுக்களையும் வரவழைத்து தன் ராஜ்யபாரத்தின் மகிமையையும், ஐசுவரியத்தையும், பிரதாபத்தையும் நூற்றெண்பது நாளளவும் விளங்கச் செய்து கொண்டிருந்தான். அக்கோலாகலக் கொண்டாட்டம் முடிகிறபோது, தன் அரண்மனையை ஒட்டிய சிங்காரத் தோட்டத்தில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். அவ்விருந்தில் பரிமாறுவதற்கும், பருகுவதற்கும், சாப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் பொன்னால் செய்யப்பட்டவைகளாம். அப்படியானால், அவ்விருந்தின் தன்மையை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்!

இப்படி, தன் மகிமைப்பிரதாபத்தின் மூலமும், கோலாகலக் கொண்டாட்டத்தின் மூலமும், எண்ணிப் பார்க்கவே முடியாத விருந்தின் மூலமும் தனக்குக் கிடைத்த பேரும், புகழும், பெருமையும் போதாதென்று, தன் பேருக்கும், புகழுக்கும், பெருமைக்கும் மேலும் மெருகேற்றும்படியாய், மகாரூபவதியாயிருந்த பட்டத்து ராணியாகிய வஸ்தியை ராஜவஸ்திரம் தரித்தவளாக அவைக்கு முன் வரக் கட்டளையிட்டான். ஆனால், ராஜாத் தியாகிய வஸ்தி, தனக்குச் சொல்லியனுப்பப்பட்டதின்படி செய்யாமல் போனபடியால், அதிரடியாய் அந்த ஸ்தானத்திலிருந்து அகற்றப்பட்டாள்.

அதன்பின்பு, சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு, காலியாக இருந்த பட்டத்து ராணியின் இடத்திற்கு, ரூபவதியாயிருக்கிற கன்னிப் பெண்களைத் தேடும் படலம் ஆரம்பமாயிற்று. இதை எப்படியோ அறிந்து கொண்ட ஞானமும், சமயோசித புத்தியும், அத்தோடு தேவபக்தியும், தேசப்பற்றும் கொண்ட மொர்தெகாய் செயலில் இறங்கினான். இந்த மொர்தெகாய், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் சிறைபிடித்துப் போகப்பட்டவர்களில் ஒருவன். இவன், தாயும், தகப்பனும் இல்லாத தன் சிறிய தகப்பனுடைய மகளைத் தன் மகளாக வளர்த்து வந்தான். அவள் ரூபவதியும், சௌந்திரியமுள்ளவளாயும் இருந்தாள். இவளை

தேசமெங்கும் தேடிக்கண்டுபிடிக்கப்பட்ட ரூபவதிகளில் ஒருத்தியாக இருக்கும்படியான வேலையை சாமார்த்தியமாகச் செய்து முடித்தான். தான், ஒரு அடிமைப்பெண் என்பதை எஸ்தர் சொல்லக்கூடாதென்று அவன் அர்த்தத்தோடு அறிவுறுத்தியுமிருந்தான் (2:10). ஆயத்த வேலைகள் அனைத்தும் முடிந்து, பட்டத்து ராணியைத் தேர்ந்தெடுக்கும் சமயமும், எஸ்தர் உள்ளே பிரவேசிப்பதற்கான முறையும் வந்த போது, எல்லாருடைய கண்களிலும் தயைபெற்றுக் கொண்ட எஸ்தருக்கு, இறுதியில் ராஜாவின் அன்பும் கிடைத்தது. அவ்வளவு தான். அடிமைப் பெண்ணாகிய எஸ்தர், குப்பையிலே கிடந்த குண்டுமணியான எஸ்தர் பட்டத்து இளவரசியானாள். ஆனாளா? அல்லது ஆக்கப்பட்டாளா? ஆக்கப்பட்டாள். அப்படியானால், யாரால்? மொர்தெகாயால், மொர்தெகாயல் மாத்திரமா? நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்? நீங்கள், அப்படி நினைக்கமாட்டீர்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அப்படியானால், யாரால்? கண்டிப்பாக சர்வவல்லவரால் தான். சந்தேகம் வேண்டவே வேண்டாம்.

தேவனுடைய தாங்கி வழிநடத்தும் கரம் இங்கே இப்படியாக இருந்தபடியால் பிசாசும் தன் பங்குக்குக் காரியமாற்ற முழு வீச்சில் இறங்குகிறான். தேவனுடைய திட்டத்தைத் தவிடு பொடியாக்க வேண்டுமென்ற சதியோடு, தனது கைக்கூலியாகச் செயல்படுத்துவதற்கு சகல தகுதிகளையும் பெற்ற ஆமான் என்னும் மனிதனைக் கண்டுபிடிக்கிறான். ஆம், முன்பின் தெரியாத ஆமான், இப்பொழுது ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்துக்கு வந்து சேருகிறான். அப்படித்தான் இவன் ஒரு நல்லவனா என்று பார்த்தால், வசனம் இவனை மூர்க்கம் நிறைந்தவன் என்று கூறுகிறது. அப்படியானால், இவன் தேவனுடைய மனிதனாக இருக்க வாய்ப்பில்லை தானே.

இந்த ஆமானை, ராஜாவின் ஊழியக்காரர் அனைவரும் வணங்கி, நமஸ்கரித்தார்கள். பக்தியுள்ள யூதனாகிய நம் மொர்தெகாய் மாத்திரம் விதிவிலக்காக விலகி நின்றான். அதிகார போதை தலைக்கேறியதால் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த ஆமானால், இந்த பக்தியுள்ள யூதனின் செயலைப் பொறுக்க முடியவில்லை. ஆத்திரம் பொங்குகிறது. கோபம் கொப்பளிக்கிறது. ஆனால், சாமானியனான இந்த மொர்தெகாயின் மீது மாத்திரம் கை போடுவது, அவனுக்கு அற்பமாகத் தெரிந்தது. ஆகையால் ஒட்டுமொத்த யூதரையும் சங்கரிக்க வகைதேடுகிறான். வஞ்சக எண்ணம் கொண்ட இந்த ஆமான், தன் சதியை நிறைவேற்றுவதற்கு வெகு சாமர்த்தியமாகக்காய் நகர்த்தினான். இவனின் தந்திர வார்த்தைகளுக்கு தலை வணங்கிய ராஜாவாகிய அகாஸ்வேரு, உன் இஷ்டப்படி செய்யலாம் என்று (3;10) வாய் மொழி உத்தரவு கொடுத்ததோடல்லாமல், அது இராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரையும் போடப்பட்டது. (3:12). இவ்விதம் தனக்கு ஏக போகமாய்க் கொடுக்கப்பட்ட எக்கச்சக்கமான உரிமையை, தன் வஞ்சகத்தை நிறைவேற்றக் கிடைத்த தக்க தருணம் எனக்கருதி, யூத இனம் முழுவதையும் பூண்டோடு ஒழிக்க ஏற்பாடு செய்துவிட்டான். ஆம், மாதமும், தேதியும் குறிக்கப்பட்டு, சகல தேசத்திற்கும் செய்தியும் போய்ச் சேர்ந்தது. (எஸ்தர் 3:13-15).

இப்படி, தேவ ஜனமாகிய தன் இனத்திற்கு நேரப் போவதை அறிந்து மொர்தெகாய், தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக் கொண்டு, ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்தான். ஆனால், அங்கே தானே அவன் தடுத்து நிறுத்தப்படுகிறான். அதற்கு மேல் செல்ல அவனுக்கு அனுமதி இல்லை. எப்படியோ இச்செய்தி, தாதிமார்கள் மூலமும், பிரதானிகள் மூலமும் ராஜாத்தியாக எஸ்தருக்கு எட்டிற்று. ஆனால், அவளுக்கு விஷயம் விளங்கவில்லை. காரியம் என்ன? முகாந்திரம் என்ன என்று விசாரித்து வரச் சொல்லுகிறாள். அப்பொழுது தான் விபரம் தெரிகிறது. விபரம் வந்த கையோடு தன் வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாயிடமிருந்து **உடனடியாகச் செயல்படு** என்று நிர்பந்தமும் வருகிறது. ஒரு பக்கம், தனது தந்தையிடமிருந்து நிர்பந்தம். மறுபக்கம் ராஜா அழைக்காமல் யாரும் உள்ளே செல்லக்கூடாது என்ற மாறாப் பிரமாணம். எஸ்தரின் நிலை, இப்பொழுது, " இருதலைக் கொள்ளி எறும்பு " போலானது. செயல்படமுடியாமல் தவிக்கிறாள். தன் நிலையை மொர்தெகாய்க்குத் தெரிவிக்கிறாள். மொர்தெகாய் எஸ்தரின் பதிலை ஏற்க மறுக்கிறான். மீண்டும், எச்சரித்துச் செய்தி அனுப்புகிறான். இதோ அந்த எச்சரிப்பின் வார்த்தைகள். "**நீ ராஜாவின் அரண்மனையிலிருக்கிறதினால், மற்ற யூதர்கள் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே". நீ இந்தக் காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள். நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான்.** (எஸ்தர் 4:13, 14).

தான் ஆசையோடு வளர்த்த எஸ்தருக்கு, மொர்தெகாய் சொல்லியனுப்பின, "யாருக்குத் தெரியும்?" என்ற பதில், நமக்கு மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகிறது. 1. உனக்குக் கிடைத்திருக்கும் "ராஜமேன்மை" உன் தகுதியினாலே உனக்கு கொடுக்கப்படவில்லையென்பது. 2. நீ அரமனை வாசியாயிருக்கும்படி, அதாவது சுகபோகமாய் வாழும்படி மாத்திரம் இந்த "ராஜமேன்மை" உனக்குக் கொடுக்கப்படவில்லையென்பது. 3. உனக்குக் கிடைத்திருக்கும் "ராஜமேன்மைக்கு" ஒரு மேலான நோக்கம், ஆம், ஓர் உன்னத நோக்கம் இருக்கக்கூடும், அது "யாருக்குத் தெரியும்" என்பது.

அருமையானவர்களே, மொர்தெகாயின் பதிலை, ஒரு புதிய ஆண்டைக் கண்டிருக்கிற நம்முடைய வாழ்க்கையோடு அப்படியே ஒப்பிட்டுப் பார்ப்போம். மொர்தெகாய், எஸ்தருக்கு சொல்லியனுப்பியது போல் நம்முடைய தகுதியினால் இப்புதிய ஆண்டை நாம் பெற்றுக்கொள்ளவில்லை. நம்முடைய பலமும், பராக்கிரமும் நம்மை இப்புதிய ஆண்டுக்குள் அழைத்து வரவில்லை. நம்முடைய அறிவும், புத்தியும் இதற்கு உதவி செய்யவில்லை. நம்முடைய நீதியும், பரிசுத்தமும் இதற்குத் துணை நிற்கவில்லை. எல்லாம் அவருடைய கிருபை. ஆம், புலம்பல் தீர்க்கன்

சொல்வது போல், " நாம் நிர்மூலமாகாதிருக்கிறது அவருடைய கிருபை". (புலம்பல் 3:22). புதிய வருடத்தைக் கண்டிருக்கிற நாம் இந்த உண்மையை முதலாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, மொர்தெகாய், எஸ்தரே, நீ அரமனை வாசியா யிருந்து சுகபோகமாய் வாழ்வதற்கு இந்த மேன்மை உனக்குக் கொடுக்கப்படவில்லையென்பது போல், தேவன் கூட்டிக் கொடுத்த இப்புதிய ஆண்டு, நாம் உல்லாசமாய் வாழ்ந்து, உலக இன்பங் களை அனுபவிப்பதற்காகக் கொடுக்கப்படவில்லை. சுகபோக மாய் வாழ்கிறவர்கள் உயிரோடு செத்தவர்கள் என்று வசனம் கூறுகிறது. (1 தீமோ. 5:6).

மூன்றாவதாக, மொர்தெகாய், உனக்குக் கிடைத்திருக்கும் ராஜ மேன்மைக்கு ஓர் உன்னத நோக்கம் இருக்க வேண்டுமென்று எஸ்தருக்குச் சொன்னது போல், நமக்குக் கிடைத்திருக்கும் புதிய ஆண்டுக்கும் ஓர் உன்னத நோக்கம் இருக்கக்கூடும். அது யாருக் குத் தெரியும்? அந்த உன்னத நோக்கத்தை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று உன்னதமானவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கக் கூடும். யாருக்குத் தெரியும்.

பழம்பெரும் பக்தன் யோபு சொல்லும் போது, "சர்வ வல்ல வருக்குக் காலங்கள் மறைக்கப்படாதிருக்க அவரை அறிந்தவர் கள் அவர் நியமித்த நாட்களை அறியாதிருக்கிறதென்ன?" என்று கூறுகிறான். (யோபு. 24:1). அதாவது, காலங்களை அவர் நியமிக்கிறார் என்றும், அவரை அறிந்தவர்கள் அதை அறிந்து கொள்ள வேண்டுமென்றும் சொல்லுகிறார். மேலும், சங்கீதக் காரர்களில் ஒருவனான ஆசாப், வருஷங்கள் உன்னதமானவரு டைய வலது கரத்திலிருக்கிறது என்று சொல்லுகிறான். (சங். 77:10). இந்த வசனங்களிலிருந்து நமக்குப் பளிச்செனத் தெரியும் உண்மையாதெனில், தேவன் நமக்கு இந்தப் புதிய ஆண்டைத் தந்திருக்கிறார். " அவரை அறிந்திருக்கிற நாம், இதை அறியாம லிருந்து விடக்கூடாது" என்பது.

அப்படியானால், தேவன் நமக்கு இந்த ஆண்டை எதற் காகக் கூட்டிக் கொடுத்திருப்பார்? அது யாருக்குத் தெரியும்? மொர்தெகாய் கூட, எஸ்தரிடம் இதற்காகத்தான் இந்த மேன்மை உனக்குக் கிடைத்திருக்கிறதென்று சொல்லவில்லை. மாறாக, "இதற்காக இருக்கலாமே" என்று தான் கூறுகிறார். அதே போன்று, இந்தப் புதிய ஆண்டும், இதற்காகத்தான் நமக்குக் கிடைத்திருக் கிறதென்று நானும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், அது இதற்காக இருக்கலாமே யாருக்குத் தெரியுமென்று நாம் அநேகக் காரியங்களைக் கூற முடிந்தாலும், அவையெல்லாவற் றையும் இங்கே பார்க்க முடியாதாகையால், அவசியமான இரண்டை மாத்திரம் இப்பொழுது பார்ப்போம்.

**I நீங்கள் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் இருக்கலாம்**

நம்முடைய தலைப்பின் கீழாக, நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல் பாடம், நாம் உண்மையான உபதேசத்தை அறிந்து கொள்ளும்படியாய் காலங்களைத் தன் கையிலே வைத்தி ருக்கிற தேவன், இப்புதிய ஆண்டை நமக்கு கூட்டிக் கொடுத்திருக் கலாமே, யாருக்குத் தெரியும்? என்பது.

ஒருவேளை, நீங்கள் நினைக்கலாம், சொல்லுவதற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கும்போது, உபதேசம் பற்றி நான் உபதேசம் பண்ணுகிறேனே என்று. உபதேசம் அவ்வளவு முக்கிய மானதா என்று நீங்கள் எண்ணலாம்! ஆனால், தேவனுடைய உபதேசம் அவரை உண்மையாய் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும் முக்கியமானது தான். சந்தேகமில்லை.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, தன்னுடைய நாட்களில், தேவனால் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும் கடிந்து கொண்டார். அத்தோடு அந்த உபதேசங்களைப் பின்பற்றுவது வீண் என்றும் எடுத்துரைத்தார். (மத். 15:9). மேலும், பவுலடியார் கொரிந்தியருக்குச் சொல்லும் போது, நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே என்கிறார் (1 கொரி. 15:2). இந்த வசனங்கள், நமது பக்திக்குண்டான வாழ்வுக்கு உபதேசமும், பிரசங்கமும் எவ்வளவு அவசியமானதென்பதைக் காட்டுகிறது.

கிறிஸ்துவானவர் இப்பூமியை விட்டுச் செல்வதற்கு முன்பாகக் கொடுத்த பிரதான கட்டளையில், உபதேசத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். உலகமெங்கும் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று சொன்னவர் அத்தோடு நிற்காமல், "*நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்*" என்றார். (மத். 28:19,20).

ஆம், இயேசு போதித்த யாவற்றையும், இயேசுவானவர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின எல்லாவற்றையும், இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இயேசுவானவர், தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி; நீங்கள் என் உபதேசத்திலே நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்று கூறுகிறார். (யோவான் 8:31). அப்படியானால், உபதேசத்திலே நிலைத்திராவிட்டால், அவருடைய உண்மையான சீஷனாயிருக்க முடியாது. இதுதானே, அதன் பொருள். உபதேசம் முக்கியம் என்பதை, இயேசுவைவிட யார் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?.

அப்படியானால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், நாம் செய்கின்ற அனைத்தும் உபதேசத்தின்படியாக இருக்கிறதா என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இயேசுவின் நாட்களில், மனுஷருடைய கற்பனைகள் உபதேசங்களாக இருந்தது, இன்றைக்கும் அப்படியே உள்ளது. (மத். 15:2) பவுலின் நாட்களில் வேற்றுமையான உபதேசம் இருந்தது. (கலா. 1:6,1. தீமோ. 1:3). அது இன்றைக்கும் இருக்கிறது. பேதுருவின் நாட்களில் கள்ளப் போதகர்கள் இருந்தார்கள். (II பேது 2:1). கடைசி அப்போஸ்தலனான யோவானின் நாட்களிலும் கள்ள தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இன்றைக்கும் இருக்கிறார்கள். கள்ள ஆவிகளும் இருந்தது (1 யோவான் 4:1). அது அப்படியே நம்முடைய

நாட்களிலும் இருக்கிறது. ஆகையால், நாம் அவைகளைச் சோதித்துப் பார்த்து மெய்யானதைக் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். (1யோவான் 4:1, 1தெச.5: 21). ஆகையால், அருமையானவர்களே, இப்புதிய ஆண்டிலேயே இயேசுவின் மெய்யான சீஷனாயிருப்பதற்கு, அவரின் உண்மையான உபதேசத்தைப் பின்பற்றத் தீர்மானிப்போம். அதற்காக, இந்த ஆண்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாமே, அது யாருக்குத் தெரியும்?

**II நீங்கள் உண்மையாய் இரட்சிக்கப்படும்படியாய் இருக்கலாம்.**

நம்முடைய தலைப்பு நமக்குக் கற்றுத் தருகின்ற, அடுத்த பாடம், இப்புதிய ஆண்டு நாம் உண்மையாய் இரட்சிக்கப்படும் படியாய் இருக்கலாம். அது யாருக்குத் தெரியும்? என்பது.

உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தீமோ. 2:4) படைத்தவரின் சித்தம் இதுவாக இருந்தாலும், படைப்பாகிய மனிதன் இது பற்றி கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. தான், இரட்சிக்கப்பட வேண்டுமென்ற உணர்வில்லாத ஒரு வாழ்க்கையைத் துணிகரமாய் நடத்திக் கொண்டிருக்கிறான். ஆனால், ஒன்று நிச்சயம். சரீரத்தில் அவனவன் செய்கின்ற காரியங்களுக்கான பலன் ஒரு நாளில் வெளிப்பட்டே ஆகும். (கொரி. 5:10) அப்பொழுது யாரும் தப்பவே முடியாது.

தொட்டில் முதல் சுடுகாடு வரையிலான வாழ்க்கையில், மனிதன் எண்ணிலடங்காத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். ஆனால், கேட்க வேண்டிய ஒரு கேள்வியாகிய, அவனுடைய நித்தியத்தைத் தீர்மானிக்கக் கூடிய கேள்வியாகிய, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வியை மாத்திரம் ஏனோ கேட்கத் தவறிவிடுகிறான். ஆனால், இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டு அதற்குச் சரியான பதிலைப் பெற்று, அதற்கு உண்மையாய்க் கீழ்ப்படிவார்களானால், அவன் வாழ்வு இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

இக்கேள்வியை இப்பூமியின் வாழ்வில் கேட்கின்ற வெகு சிலரும், இக்கேள்விக்கான பதிலை உண்மையாய்ப் பெற்று, அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதில்லை. இரட்சிப்புக்கான வழி இது தான் என்று ஆளாளுக்கு ஒவ்வொருவிதமாய் போதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒளியின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன், சத்தத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுகிற மேதாவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை மேதாவிகள் என்பதா அல்லது அப்பாவிகள் என்பதா தெரியவில்லை. ஒரு வேளை, ஒருவன் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும் இரட்சிக்கப்படுவது உண்மையானால், அப்போஸ்தலன் பவுலை, தமஸ்குவின் நெடுஞ்சாலையில் இயேசுவானவர் ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும் சந்தித்தபோது, அவன் ஏன் இரட்சிக்கப்படவில்லை? சொல்லுங்கள். நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும் (அப்போஸ்தலர் 22:10) என்று ஏன் பவுலுக்கு சொல்லப்பட்டது? மாத்திரமல்ல, அங்கு, நீ எழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப். 22:16) என்று ஏன் போதிக்கப்பட்டது? சிந்திப்போம்.

இரட்சிப்பு தேவன் சம்பந்தப்பட்டது. தேவன் சம்பந்தப் பட்ட யாவும் கிரமமாகவும், நல்லொழுக்கமாகவும் செய்யப்பட வேண்டும் (1கொரி. 14:40). இரட்சிப்பு நம்முடைய நித்தியம் சம்பந்தப் பட்டது. நித்தியம் சம்பந்தப்பட்ட யாவும் பயத்தோடும், பக்தியோடும் செய்யப்படவேண்டும். (பிலி. 2:12) அப்படியானால், நம்முடைய ஆத்தும இரட்சிப்பும், அதற்கான முயற்சியும் இந்தளவில் இருக்கிறதா?. சொல்லுங்கள். "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை"(அப்.4:12). "நாமம்" என்றால் "அதிகாரம்" இரட்சிக்கப்படுவதற்கான அதிகாரத்தை தமது வசனத்தின் மூலமாகக் கொடுத்துள்ளார். நாம் உணமையில் இரட்சிப்படைய வேண்டுமானால், அந்த இரட்சிப்பு வசனங்களின் போதனையின்படியாக இருக்க வேண்டும்.

இரட்சிப்படைவதற்கான வசனங்களின் போதனை இதோ.
1. தேவனை விசுவாசிக்க வேண்டும். (எபி. 11:6 அப். 89:37).
2. பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். (2 பேதுரு 3:9)
3. இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10 அப். 8:37), 4. பாவமன்னிப்புக்காய் ஞானஸ்நானம் பெற வேண்டும். (மாற்கு. 16:16; அப். 22:16). இதன்படி நாம் செய்தால், நாம் இயேசுவின் நாமத்தினாலே உண்மையாய் இரட்சிக்கப்பட்டவர்களாவோம்.

அருமையானவர்களே, இப்புதிய ஆண்டை, தேவன் எதற்காக நமக்கு கூட்டித் தந்திருக்கிறார் என்று தெரியாது. ஆனால், உண்மையான உபதேசமும், உண்மையான இரட்சிப்பும் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லாத இந்தக் காலத்தில், நீ உண்மையான உபதேசத்தையும், அதனடிப்படையில் உண்மையான இரட்சிப்பையும் பெற்றுக் கொள்ளும்படியாய் இருக்கலாமே யாருக்குத் தெரியும். உன்னையும், என்னையும் தேவன் இந்தளவு நேசித்திருக்கும்போது, நாம் ஏன் அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்கக் கூடாது?

மொர்தெகாய், உனக்கு கிடைத்திருக்கும் ராஜ மேன்மை, இதற்காக இருக்கலாமே என்று சொன்ன மாத்திரத்தில், எஸ்தர் உடனடியாக செயல்பட்டதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஆம், அவளது உயிருக்கே அங்கு ஆபத்து நேரிடலாம் என்ற சூழ்நிலை இருந்தும் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், கொலு மண்டபத்தில் ராஜாவை சந்தித்தாள். தான் செய்ய வேண்டியதைக் குறைவில்லாமல் செய்தாள். அதன் மூலம் தன்னையும் தன் குலத்தையும் இரட்சித்துக் கொண்டாள். எஸ்தருக்கு ராஜமேன்மை கிடைத்தது போல, தேவன் நமக்குப் புதிய ஆண்டை தந்திருக்கிறார். எஸ்தருக்குச் சொல்லப்பட்டது. நாம் என்ன செய்யப்போகிறோம்? நாமும் அந்த எஸ்தரைப் போலவே விரைந்து செயல்பட்டு, உண்மையான உபதேசத்தினடிப்படையில், நம்மையும், நம்மோடிருப்பவர்களையும் உண்மையான இரட்சிப்புக்குள் வழி நடத்துவோமா?. கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் இரட்சிப்படைந்திருந்தால், அதிலே உறுதியாய் நிலைத்திருப்போம். நாம் அப்படிச் செய்யப் பரலோகத்தின் தேவன் இரக்கங் கட்டளையிடுவாராக! ஆமென்!. †

# கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணுதல்

*J.C. Choate*

யோவான் 14:6-ல், இயேசு இப்படியாகக் கூறினார், "... நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்". இது உண்மையாக இருக்கும் போது, அது உண்மையாகத்தான் இருக்கிறது. நாம் கிறிஸ்துவை எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு கற்றுக்கொள்ள, இவ்வுண்மை நம்மைத் தூண்ட வேண்டும். இயேசு வழி, சத்தியம், ஜீவனாக இருப்பதினாலும், அவரை அல்லாமல் நாம் பரலோகம் போக முடியாது என்பதினாலும், அவரை நாம் மனதில் வைத்து, மற்றவர்களோடு நாம் அவரை ஒப்பிட்டு குழம்பி விடாமல் இருக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவைப் பற்றிய படிப்பை தொடங்கும் போது, சென்ற பாடத்தில் நாம், கிறிஸ்து எப்படி வாக்குத்தத்தம் செய்யப்பட்டார், எப்படி அந்த தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறை வேறியது என்பதையும் நாம் கண்டோம். கிறிஸ்து வேத வாக்கியங்களில் முன்னுரைக்கப்பட்டார், அப்படி அவரைப் பற்றிச் சொல்லியதெல்லாம், மிகத் துல்லியமாக நிறைவேறியது என்பதினால் அவர் எல்லாரையும் போல இன்னுமோர் மனிதர் அல்ல, அவர் உண்மையில் ஒரு தேவ குமாரனாக இருக்கிறார்.

அவர் வாக்குத்தத்தம் செய்யப்பட்டார் என்பதும், அவரது முதலாம் வருகை பற்றி தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டது என்பதுமல்லாமல், அவருடைய முதலாம் வருகைக்கான ஆயத்தமாக வேறு என்ன வெல்லாம் செய்யப்பட்டது? அல்லது மனித குலத்திற்கு அவரை அறிமுகப்படுத்தும் எந்த செயலுமில்லாமல் அவர் அப்படியே திடீரென்று வந்தாரா? இந்த முறை நம்முடைய பாடத்தில் நாம் கர்ததருடைய வருகைக்கு எப்படி ஆயத்த வேலைகள் செய்யப்பட்டது என்பது பற்றிப் படிக்கப் போகிறோம்.

ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது வேறு முக்கியமான நபரோ வேறு ஒரு தேசத்திற்கு அரசு முறை பயணம் செய்யும் போது, அவர் போவதற்கு முன் மந்திரிகளும், வேறு அரசாங்க அதிகாரிகளும் அவருக்கு முன்பாக சென்று, அவருடைய வருகைக்காக ஆயத்த வேலையை செய்வார்கள் என்பது நாமெல்லோருக்கும் தெரியும். ஒரு ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அரசனோ திடீரென்று நான் இந்த தேசத் திற்கு போகிறேன் என்று சொல்லி உடனே அத்தேசத்திற்கு புறப்பட்டு போய்விடுவதில்லை.

அப்படி அவர்கள் செய்யாமல், சகல ஏற்பாடுகளையும் கவனித்து, அவர்கள் வருகைக்கான சகல ஆயத்த வேலைகளையும் செய்த பின்னரே அவர்கள் வருவார்கள். அதுபோலவே, தேவனுடைய ஒரே பேரான குமாரனும் இராஜாதி இராஜனும், கர்த்தாதி கர்த்தருமாக இருக்கிற கிறிஸ்துவின் வருகைக்காகவும் வழி ஆயத்தமாக்கப்பட்டது. வேதாகமத்தில் யோவான் ஸ்நானகன் என்று அழைக்கப்பட்டவரை குறித்து நான் இங்கே பேசுகிறேன்.

வேதாகமத்தில் ஒரு பகுதியான புதிய ஏற்பாட்டை நாம புரட்டி, லூக்கா நூலில் நாம் பார்க்கையில், அங்கே யோவானுடைய பிறப்பைக் குறித்தும், அவனுடைய பணியைக் குறித்தும் நாம் படிக்கிறோம். லூக்கா. 1:5 யை நாம் வாசிக்கத் துவங்கினால், யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து. அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்.

அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைப்படி தேவ சந்நிதியிலே ஆசாரிய ஊழியம் செய்து வருகிற காலத்தில், ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் தேவாலயத்துக்குள் பிரவேசித்து தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப் பெற்றான். தூபங்காட்டுகிற வேளையிலே ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூப பீடத்தின் வலது பக்கத்திலே நின்று அவனுக்குத் தரிசனமானான். சகரியா அவனைக் கண்டு கலங்கி, பயமடைந்தான். தூதன் அவனை நோக்கி, சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை

அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.

அப்பொழுது சகரியா தேவ தூதனை நோக்கி; இதை நான் எதினால் அறிவேன் நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான். தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்தமாக நான் தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்; உன்னுடனே, பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன். இதோ, தகுந்த காலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகளை சம்பவிக்கும் நாள் மட்டும் நீ பேசக் கூடாமல் ஊமையாயிருப்பாய் என்றான் (லூக்கா 1:5-20).

அதன்பின்பு வேதாகமம் தொடர்ந்து சொல்லுகையில், எலிசபெத் ஆறுமாத கர்ப்பிணியாயிருக்கையில், காபிரியேல், நாசரேத் என்னும் ஊருக்கு மரியாள் என்ற ஸ்திரீயிடம் அனுப்பப்பட்டான். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பெயரிடப்படும் என்று அவன் கூறினான். அதன் பின்பு எலிசபெத்து ஒரு குமாரனைப் பெற்றாள் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். அவனுக்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்ற கேள்வி எழுந்த போது, எலிசபெத்து "யோவான்" என்று பெயரிட வேண்டும் என்றாள். சகரியாவும் இதையே சொன்னான். அப்படி அவன் சொன்ன போது, அவன் நாவு கட்டு விட்டது அவன் உதடுகளை திறந்து தேவனை துதித்தான். அதன் பின்பு அவன், தீர்க்கதரிசனம் உரைத்தான், யோவானைப் பற்றி அவன் கூறும்போது, "...நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்து போய் அந்த காரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிற வர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதனத்தின் வழியிலே நடத்தவும் அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்திருக்கிறது என்றான். அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்" (லூக். 1:75-89).

யோவானைப் பற்றி நாம் வாசிக்கையிலே, “கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள்...” (ஏசாயா. 40:3). இதைக் குறித்து மத்தேயு ஆசிரியர் எழுதுகையில்....” கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைப் பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்க தரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான் வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது. அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (மத்தேயு. 3:3-6). அதன்பின்பு யோவான் “மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்”. (மத்தேயு. 3:11,12) கிறிஸ்து ஞானஸ்நானத்தைப் பற்றி போதிப்பார் (மாற்கு 16:16). அதாவது, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானாஸ்நானம் பெற வேண்டும் (ரோ. 6:3,4, அப். 2:38). ஆகவே, இயேசுவால் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக யோவான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் போதித்தான். பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் வல்லமையை கிறிஸ்து பெற்றிருப்பார். அதாவது, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் இயேசுவால் ஞானஸ்நானம் பெறுவார்கள், ஆனால், துன்மார்க்கரோ நித்திய அக்கினியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவார்கள்.

இயேசுவானவர், யோவானிடம் ஞானஸ்நானம் பெற வந்தபோது, “... யோவான் அவருக்குத் தடை செய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குக் பிரதியுத்தமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்.

அப்பொழுது, அவருக்கு இடங் கொடுத்தான். இயேசு ஞானஸ் நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப் பட்டது; தேவ ஆவி புறாவைப் போல் இறங்கி, தம்மேல் வருகி றதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரிய மாயிருக்கிறேன் என்று உரைத் தது. (மத். 3:14- 17).

பின்பு ஏரோது, யோவான் ஸ்நானனை சிரச்சேதம் செய் தான் அவன் சொல்லும், கிறிஸ் துவானவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும் என்றான். (யோவான் 3:30) யோவான் ஒரு வேலையை செய்யும்படி வந்தான் அந்த வேலையை அவன் செய்து முடித்தவுடன் காட்சியை விட்டு அவன் கடந்து போய்விட்டான். கிறிஸ்துவான வருக்காக வழியை ஆயத்தம் செய்யும்படி வந்தான், ஆகவே, கிறிஸ்து வளர்ந்து பெருக, அவன் வழிவகுத்தான். யோவான் வந்து நிலைக்கவும், ஒரு சபை யைக் கட்டவும் வரவில்லை. அவன் ஸ்நானகன் என்று அழைக் கப்பட்டது. அவன் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததி னால் தான் அவன் சபை கட்டி னதிற்காக இல்லை. எபேசுவில் பவுல் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை பெற்ற சில ரை சந்தித்த போது, "... யோ வான் தனக்குப் பின் வருகிறவ ராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத் தானே என்றான். அதைக் கேட்ட போது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 19:4,5).

ஆக, இந்த பாடத்தில் கிறிஸ்துவுக்காக வழியை ஆயத்தம் பண்ணும் வேலை யோவானுக்கு கொடுக்கப்பட் டது. இந்த வேலை தேவனால், யோவானுக்கு கொடுக்கப்பட் டது, அதை நிறைவேற்றும் பொறுப்பு அவனுக்கு இருந்தது. அவன் கிறிஸ்துவுடன் போட்டி போட வரவில்லை. இன்றைக்கு சிலர் கிறிஸ்துவை விட யோவா னை மகிமைப்படுத்த ஆசைப் படுகிறார்கள் அது தவறு. கிறிஸ்து ஒருவரே ஆண்ட வரும், இரட்சகருமாயிருக்கிறார். யோவான் ஒரு மாமனிதன் தான், ஆனால், அவன் தன்னை பிரசங் கிக்க வரவில்லை. கிறிஸ்துவை பற்றி பிரசங்கிக்கவே வந்தான்.

ஆகவே, நாமும் கிறிஸ்து வைப் பிரசங்கிக்கிறோம். அவ ரை ஏற்றுக் கொண்டு, அவரை விசுவாசித்து, அவருக்கு கீழ்ப் படிய உங்களை ஊக்கப்படுத்து கிறோம். நீங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றால், மாற்கு 16:16ல் சொன்னது போல், அவர் உங்களை இரட்சித்து தமது சபையில் சேர்ப்பார் (அப். 2:47). †

# நீங்கள் இதைப் பற்றி எண்ணியதுண்டா?

**ரேச்சல் இராஜநாயகம்**

இன்றைக்கு மக்கள் தங்களுடைய மைய நோக்கமாக கிறிஸ்துவையும், அவர் தங்களுக்காக செய்த தியாகத்தையும் மாத்திரம் பெரிதாக நினைத்துக் கொண்டு, சபைக்கு மிகக் குறைந்த மதிப்பையே தருகிறார்கள்.

ஆனால், உண்மை யாதெனில், தேவனுடைய பார்வையில் முக்கியமானதாக இருப்பது சபையே! சரித்திரத்தை நாம் கவனித்துப் பார்க்கையில் தேவனுடைய இலக்கு இயேசுவின் மரணமல்ல. அந்த மரணத்தினால் தேவன் வெற்றிகரமாக செய்து முடித்தது - மனுக்குலத்தின் ஆத்துமாக்களை தன்னிடத்தில் திருப்பிக் கொண்டதே - அப்பெருஞ்செயல். சபையைப் பற்றிய தான விளக்கம் மீட்கப்பட்ட மனிதர்களின் கூட்டம் என்பதே. இந்த காரணத்திற்காகத் தான் கிறிஸ்து தாமே சபைக்காக பாடுபட்டார்.

நித்திய ஜீவனை உண்டாக்குவதற்காக தன்னையே மரணத்துக்கு ஒப்புக் கொடுத்த அவரை ஒருபோதும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. பிதாவாகிய தேவனின் பார்வையிலும், இயேசு கிறிஸ்துவின் பார்வையிலும் மிகவும் விலையேறப்பெற்ற அந்த காரியத்தை நாம் குறைவாக எண்ணிவிடக் கூடாது? ஏனென்றால், தனக்காக சபையை சம்பாதிக்க இயேசு மிக உயரிய தியாகத்தை செய்ய வேண்டியிருந்தது.

**நீங்கள் இதைப் பற்றி எண்ணியதுண்டா?**

ஒவ்வொரு உயிருள்ள மனிதனும் ஒரு பாதையிலே பிரயாணித்துக் கொண்டிருக்கிறான். சரீரப்பிரகாரமாக நாம் பார்த்தால், நாம் அனைவரும் வாழ்விலிருந்து மரணத்துக்கு சென்று கொண்டுள்ளோம். நாம் பயணிக்கிற இந்த பாதை ஒரு வேளை ஆவிக்குரிய வாழ்விற்கு அழைத்துச் செல்லலாம். அல்லது ஆவிக்குரிய மரணத்தில் அந்தப் பாதை முடியலாம். ஆனால், இதில் தவிர்க்க முடியாத ஒரு கருத்து யாதெனில், நாம் எல்லாருமே ஓர் எல்லையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். எந்த முடிவை நாம் அடையப் போகிறோம்?

பழங்காலத்து மதங்களின் கடவுள்களையும், சடங்குகளையும் பின்பற்றுவோமோ? புராண காலத்து கதைகளையும், பழக்கங்களையும் பின் பற்றுவோமோ? பெரும்பான்மையானோரின் பாதை நம்மைக் கவருமோ? நம் பெற்றோர்களின் தேர்வு, நம்முடையதாகவும் இருக்குமோ? மனிதனால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு மதம் நம்முடையதாகவும் இருக்குமோ? மனிதனால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு மதம் நம்முடைய தாக இருக்குமோ? நமக்கு அருகாமையில் இருக்கும் பிரிவினைக் கூட்டம் நம்மைத் திருப்திபடுத்துமோ? அல்லது எந்த மார்க்கமு மின்றி நம்முடைய அளவுகோலைக் கொண்டு நம்மை நாமே நல்லவர்கள் என்று

தீர்த்துக்கொள்வோமோ! நாம் எப்படிச் செய்கிறோம் என்று எண்ணியதுண்டா!

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால், ஆயிரக்கணக்கான பாதைகளில் பயணிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானிக்கிறார்கள். எல்லா பாதைகளும் ஒன்றுதான் ஒரு வித்தியாசமுமில்லை என்று கருதுகிறார்கள். ஆனால், அங்கு வித்தியாசம் உண்டு. உண்மை என்னவென்றால், ஆவிக்குரிய வாழ்வு அல்லது மரணத்தை அந்த பயணத்தின் முடிவில் அடைகிறோமோ என்ற அந்த வித்தியாசத்தை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

நாம் தேவர்களையும், பழங்கால மதச் சடங்குகளையும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோமா? மத ஆகார முறைகளையும், தியானங்களையும் செய்து கொண்டுள்ளோமா? பெரும்பாலோர் சென்று கொண்டிருக்கும் பாதை நம் முன் தெரிகிறதா? அருகிலுள்ள நாமகரணக் கூட்டம் நம்மை திருப்திபடுத்திக் கொண்டுள்ளதா? பெற்றோர் எதைச் சார்ந்திருக்கிறார்களோ அதையே நாமும் சார்ந்திருக்கலாம் என்று நினைக்கிறோமா? மனிதனால் தொடங்கப்பட்ட மதத்தை பின்பற்றுகிறோமா? நாம் நம்மளவில் நல்லவர்களாயிருந்தால் போதும் எந்த மதத்தையும் பின்பற்ற தேவையில்லை என்று எண்ணுகிறோமா?

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

வேதாகமம் கூறுகிறது, "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்". (நீதி. 14:12).

"கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே: 10:23).

"அதற்கு இயேசு: நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோ. 14: 6). நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்..... " (யோ. 10:9).

இயேசு எதற்கு வாசலாயிருக்கிறார்? " நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்கிறார். நானே நல்ல மேய்ப்பன். பிதா என்னை அறிந்திருக் கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்கு செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுக்கும். (யோ. 10:7, 14-16).

**நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?**

பல வழிகள் உள்ளன, நாம் அதில் சிறந்ததை தெரிந்தெடுத்துக் கொள்ளலாம் என்று மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், தேவனுடைய குமார

னும், நம்முடைய இரட்சகருமான இயேசு கிறிஸ்து, இரண்டே வழிகள் உள்ளன. மனிதர்கள் கணக்குப்படியான, நூறுகளோ அல்லது ஆயிரங்களோ அல்ல, இரண்டு மட்டும் தான் என்கிறார்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

“ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்”. (மத். 7:13, 14).

## நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?

| | |
|---|---|
| இயேசுவின் கூற்றின்படி எத்தனை சத்தியங்கள் உள்ளன? | -ஒன்று. |
| எத்தனை இரட்சகர் உள்ளனர் | -ஒன்று. |
| எத்தனை வாசல்கள் உள்ளன | -ஒன்று. |
| எத்தனை மேய்ப்பர்கள் உள்ளனர் | -ஒன்று. |
| எத்தனை மந்தைகள் உள்ளன? | -ஒன்று. |
| எத்தனை வழிகள் உள்ளன ஜீவனுக்கு போவதற்கு? | -ஒன்று. |

## நீங்கள் இதைப்பற்றி எண்ணியதுண்டா?

ஜீவனுக்குப் போவதற்கு ஒரே ஒரு வழிதான் என்று இயேசு கூறுகிறார். அந்த ஒரே வழி அவரே. அந்த ஒரே வழியைப் பின்பற்றின ஆதிக்கிறிஸ்தவர்கள் பிரபல்யமானவர்களாக இல்லை. அவர்கள் போதித்த கொள்கையும் பிரபல்யமானதாக இல்லை. அவர்கள் வெறுக்கப்பட்டவர்கள், உபத்திரவப்படுத்தப்பட்டவர்கள், ஏனென்றால், தங்கள் தேவன் தங்களுக்கு உபதேசித்ததை அவர்கள் மற்றவர்களுக்கு உபதேசித்ததின் காரணத்தால். அதில் பல வழிகள் இல்லை. ஏற்றுக்கொள்ளக்கூடிய மதங்கள் பல அதில் இல்லை. அங்கே பல சபைகள் இல்லை. இரட்சிக்கப்படுவதற்கு **பல வழிகள்** இல்லை. தேவனை ஆராதிப்பதற்கென்று பலவிதமான வழிகள் இல்லை. “ஒரே ஒரு வழி” யைத்தான் இயேசுவும் போதித்தார், ஆதிக்கிறிஸ்தவர்களும் போதித்தனர்.

இயேசு சொன்னார், “ நான் என் சபையை கட்டுவேன்” (மத். 16:18) என்று. தேவ ஆவியினால் ஏவப்பட்டு பவுல் எழுதுகிறார். (எபேசியர் 5:25-27).

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள்”; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து,

தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

“கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்குத் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்.

தன்னுடைய சபைக்காக, தன் மக்களுக்காக, தன் இராஜ்ஜியத்திற்காக, தன் மணவாட்டிக்காக தான் மீண்டும் வரப்போகிறார் என்று இயேசு வாக்குக் கொடுத்திருக்கிறார். (வெளி. 22:12, யோவான் 14:3, மத்தேயு. 25:31-46). நீங்களும், நானும் அந்த “ஒரே வழியில்” இருக்கிறோமா?

†

வாலிபர் பகுதி

# வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி...

பென்னி மார்ட்டின்

**வா**லிபர்களாகிய உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். மனிதர்களாகிய நாம் இந்த பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டு பிடிக்க பல நூற்றாண்டுகளாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேனென்றால், நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எண்ணற்ற காரியங்களை கண்டு பிடித்திருக்கிறான். நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகம், நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டு பிடித்திருக்கிறான். ஆனால், வாழ்க்கையின் அர்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையேத் தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையையெல்லாம் நம்மால் நம்ப முடியாது. இந்த உலகில் வாழ்ந்த அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையின் அர்த்தம் பற்றி தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப் போல் எந்த ஒரு மனிதனாலும் கண்டறிய முடியாது. இஸ்ரவேலின் சிங்காசனம் அதன் முழுவல்லமையிலும், கெம்பீரத்திலும் இருக்கும் போது சாலொமோன் அரியணையில் அமர்ந்தார். சாலொமோனுக்கு ஞானம், செல்வம், புகழ் போன்றவைகள் திரளாயிருந்தது. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார் "மாயை, மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" (பிரசங்கி 1:2-4).

நான் இந்த உலகத்தை விட்டுப் போன பிறகு எனக்கு என்ன பலன் உண்டாகும்? நான் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துவேன்? இதுபோன்ற கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாலொமோன் ராஜா உலக சிற்றின்பங்களினால் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவைகள் ஏனென்றால்,

அவர் மட்டுமே உலகத்தின் சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தார், இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் அவரைப் போல் எல்லாவற்றையும் விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடியிருக்கிறார் என்பதை அலசிப்பார்த்து நாமும் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதை கண்டு கொள்வோம்.

**I சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்.**

1இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த முயற்சியையும் எடுக்க வேண்டியதில்லை, மாறாக, தேவனிடம் அதைக் கேட்டார். தேவன் அவருக்கு அதை ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும், தேவனுக்கு சேவைச் செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடை காண முடியாது என்று சாலொமோன் சொல்கிறார். உலகக் கல்வியில் மட்டும் விடை கண்டுபிடிக்க முடியாது என்று சுருக்கமாகச் சொல்கிறார். அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு; அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் (பிரசங்கி 1:18). கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர அதுவே வாழ்க்கையல்ல. வெறும் கல்வி வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய உதவி செய்யாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**II சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்.**

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். அவர் தன் அரண்மனை முழுவதையும் கட்டிமுடிக்கப் பதின்மூன்று வருஷம் சென்றது. அந்த அரண்மனையின் ஆடம்பரத் தோற்றத்தைப் பற்றி 1 இராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடியும். இது இன்றைய அம்பானி மற்றும் பில்கேட்ஸின் மாளிகைகளை விட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்ல பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும்; ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான் என்று வேத வசனம் சொல்கிறது (2 இராஜாக்கள் 10:23).

செல்வத்தின் வாயிலாக வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய முற்பட்ட சாலொமோன் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள் “பணப்பிரியனன் பணத்தினால் திருப்தியடைவதில்லை, செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை”. இதுவும் மாயையே பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள். அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோசனம் என்ன? (பிரசங்கி 5:10,11).

**III சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை பெயரிலும், புகழிலும் தேடினார்.**

சில மக்கள் இந்த உலகத்தில் வாழும் போது, பேரும்,

புகழும் பெற்றால் மட்டுமே தாங்கள் முழுமையடைவதாகக் கருதுகிறார்கள் அதை விட மகிழ்ச்சி எதுவுமில்லை என்று சொல்கிறார்கள்.

அப்படி பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்கள், எனவே அவர் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய பேரும், புகழும் உலகெங்கிலும் பரவியது. அவருடைய இராணுவச் செலவு அபரிதமானது. சாலொமோனிடத்தில் ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது; பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள். அங்கே பிரச்சனை என்னவென்றால் அவரோடு போர்ச் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்தன, அவருக்கு மரியாதைக் கொடுத்தார்கள். அவருக்கு கப்பம் செலுத்தினார்கள் (1 இராஜாக்கள் 10:22-26). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள் (1இராஜாக்கள் 10:1-9). அவருக்கு இந்த உலகத்தின் வல்லமையான ராஜாக்களின் அழகான குமாரத்திகள் மனைவிகளாக கொடுக்கப்பட்டார்கள்.

அவருக்குக் கிடைத்த பணத்திலும், புகழிலும் அவர் திருப்தியடையவில்லை. அவர் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருந்தார். வாழ்க்கையே வெறுத்தவராய் அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். "ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்குக் கீழே நான் பட்டப்பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன். இதுவும் மாயையே என்று சொல்கிறார்" (பிரசங்கி 2:15 -23).

கடைசியாக, சாலொமோன் ஞானி வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதில் விடை கண்டு விட்டார். அந்த விடையை அவருடைய வார்த்தைகளாலேயேக் கேட்போம் "காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிரசங்கி 12:13). எனவே, வாலிபர்களே, நாம் இந்த உலகத்தில் வாழ்வதற்கான நோக்கமே தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதற்காகத்தான் என்பதை புரிந்து கொண்டோம் அல்லவா, அப்படிச் செய்யும் போது நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருக்கும்.

### கிறிஸ்தவம் ஓர் இலவச மார்க்கமா? இல்லவே இல்லை

- தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விலையாகக் கொடுத்தார் (யோவான் 3:16).
- இயேசு ஆண்டவர் தன் ஜீவனை விலையாகத் தந்தார் (எபே. 5:2)
- அப்போஸ்தலர்கள் தங்களுடையவைகளனைத்தையும் விலையாகத் தந்தார்கள் (மத்.
- ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்கள் ஆஸ்திகளை விலையாகத் தந்தார்கள் (அப்.
- மக்கெதோனிய கிறிஸ்தவர்கள் தங்கள் வருமானத்தை விலையாகத் தந்தார்கள்

நாம் எப்படி?

சிறுவர் பகுதி

# தைரியமுள்ள தீர்க்கதரிசி

## ABEL. R. NAYAGAM

எனக்கன்பான சிறு பிள்ளைகளே, உங்கள் யாவரையும் நமதாண்டவர் இயேசுவின் இரக்கமுள்ள நாமத்தில் வாழ்த்துகிறேன். இம்மாதமும் தொடர்ந்து உங்களை இதன் மூலம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் சந்தோஷமடைவீர்கள் என நம்புகிறேன். ஒவ்வொரு மாதமும் வெளிவரும் செய்திகள், வேதாகமகதைகள் பயனுடையதாயிருக்கும் என விசுவாசிக்கிறேன். இம்மாதமும் ஒரு தீர்க்கதரிசி மூலம் நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ளப் போகிறோம். யார் அந்த தீர்க்கதரிசி? தொடர்ந்து பாடத்தைப் படியுங்கள்.

உங்கள் எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் கூறும் நபரையோ அல்லது அதைப் பற்றிய செய்திகளையோ மற்றும் விளம்பரங்களையோ நீங்கள் ஒருவேளை பார்த்திருக்கக் கூடும். அவர்கள் “பணத்திற்காக” உடனே உங்கள் எதிர்காலத்தை பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதே பதில். இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நாம் இந்தக் காரியத்தை குறித்து எப்படி சிந்திக்க வேண்டும் தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள்: இந்த காலத்தில் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை எவராலும் கூற முடியாது. மேலும், அவை அனைத்தும் பொய்யான கூற்றுகளேயாகும்.

சரி, நாம் பாடத்திற்கு வருவோம். நம் வேதாகத்தின் பழைய ஏற்பாட்டில், எதிர் காலத்தில் நடக்கப் போகிற அல்லது இன்னும் சொல்லப் போனால் நிறைவேறப் போகிற பல தீர்க்கதரிசனங்களை பார்க்க முடியும்.

தேவன் தம் மக்களோடு பேசுவதற்காக தனக்கும் தன் மக்களுக்கும் இடையே ஒரு மனிதனை தெரிந்தெடுத்து அவன் மூலமாக தன் செய்திகளை தம் மக்களுக்குத் தெரியப்படுத்தினார். அவ்வாறு தேவன் ஏற்படுத்தின மனிதர்களே தீர்க்கதரிசிகள் ஆவர். தீர்க்கதரிசியானவன் தேவனிடத்திலிருந்து செய்திகளை பெற்றுக் கொண்டு அதை மக்களிடத்தில் கூறி வந்தான். தேவன் கொடுக்கும் எச்சரிப்புகளையும், கீழ்ப்படியாமையினால் என்ன நடக்கும் என்பதை பற்றியும் கூறி வந்தான்.

அப்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தீர்க்கதரிசிகளில் ஒருவர் தான் எரேமியா. ஆம், நான் கூறிய தீர்க்கன் எரேமியா தான். சரி, இப்பொழுது இவரிடமிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம்.

எரேமியா வாழ்ந்த காலத்தில் இருந்த தேவ ஜனங்கள் விக்கிரகங்களையும், பொய் தேவர்களையும் வணங்கி வந்தார்கள். அவர்கள் தங்களைக் காப்பாற்றின, காப்பாற்றி வந்த ஒன்றான மெய்த் தேவனை மறந்து போனார்கள். தேவனுடைய கோபம் அதினால் அந்த ஜனங்கள் மேல் மூண்டது. எனவே, தேவன் எரேமியாவைப் பயன்படுத்தி அவருடைய கோபத்தை மக்களுக்கு தெரியப்படுத்தினார். "எரேமியாவிடம், தம் ஜனங்களின் பாவத்தை விட்டு விடுவதில்லை" என்று தேவன் கூறினார். எரேமியா மக்களிடம் கூறிய எச்சரிப்பு, "தேவன் இனி உங்களைக் காப்பாற்றி வழிநடத்தப் போவதில்லை"; "பாவத்திற்கு தண்டனையாக, ஜனங்கள் பாபிலோனியர்களிடம் 70 வருடம் அடிமைகளாயிருப்பார்கள்" என்று கூறினார். ஏரேமியாவிடமிருந்து வந்த இந்த எச்சரிப்பு பயங்கரமானதாயிருந்தாலும், மக்கள் இதை பெரிய காரியமாக எண்ணவில்லை. மாறாக, எரேமியாவை அந்த எச்சரிப்புகளுக்காக கேலி செய்து அவரை சிறைப்படுத்தி, கொன்று போடக் கூட முடிவு செய்தார்கள்.

எரேமியா தன் வாழ்க்கைக்காக பயப்பட்டிருந்தாலும், தேவன் மீது அவனுக்கு இருந்த விசுவாசம் அவனுக்கு தைரியத்தைக் கொடுத்தது. அது அவரை மேலும் தேவனுடைய செய்திகளை மிகுந்த துன்பத்தின் இடையிலும் பேச வைத்தது. எனவே தான், நாம் எரேமியாவை "தைரிய" தீர்க்கதரிசி என கூறமுடிகிறது.

இந்தக் காலத்தில் தேவன் வேதாகமத்தை நமக்கு தந்துள்ளார். நாம் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான வேலையை தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். என்ன வேலை அது? நாமும் எரேமியாவை போல தைரியம் கொண்டு, தேவன் நமக்கு செய்த எல்லா நன்மைகளையுங்குறித்தும், அவரைப் பற்றிய காரியங்கைளயும் இச் சிறுபிராயத்திலிருந்தே மற்றவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். அப்பொழுது நாம் தேவனுக்கு பிரியமான பிள்ளையாய் இருப்போம். அப்படிச் செய்வீர்களா?

தேவன் உங்களோடே இருக்கிறார். நம்மை ஆசீர்வதிப்பார். ✝

*மனப்பாட வசனம் : எபி. 10:35*

**விசுவாசம் என்பது என்ன?**

1. தேவனுடைய வாக்குதத்தங்களில் நம்பிக்கையாயிருப்பது [எபிரெயர் 11:6]
2. கீழ்ப்படிதலாயிருப்பது [எபி. 11:5]
3. பாவத்தை வெல்வது [அப். 26:18]
4. சோதனையை மேற்கொள்வது [எபே. 6:16]
5. அறியாமையை மேற்கொள்வது [2 தீமோ. 3:15]
6. ஜெபத்தில் வெற்றியாயிருப்பது [யாக். 5:15,16]
7. மனரீதியாக தேவன் தான் எல்லாம் என்று நம்புவது, ஏற்றுக்கொள்வது [ஆதி. 1:1]; [அப். 17:28]

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 6 துருவின் சாட்சி

**(சென்ற மாதத் தொடர்ச்சி)**

**III ஐசுவரியத்தைக் கெடுக்கும் வழிகள்**

இந்த வாழ்க்கையில் ஒரு மனிதன் தன்னுடைய ஐசுவரியத்தை மூன்று வழிகளில் கெடுக்கலாம். கீழ்க்காணும் வழிகளெல்லாம் இதற்காக இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன;

1. பரிசுத்தமில்லாத வழிகளினால் அந்த பணத்தை சம்பாதிப்பதன் மூலம் அவன் அதை கெடுத்துப் போட முடியும். நேர்மையற்ற முறையில் மனிதன் சேர்த்து வைக்கும் பணமெல்லாம் நியாயத்தீர்ப்பு நாளிலே அவனுக்கு விரோதமாகச் சாட்சியிடும். திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன் (எபேசியர் 4:28). பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (1 தீமோத்தேயு 6:10).

2. தனக்காக பணத்தை சேர்த்து வைப்பதினால் அவற்றைக் கெடுத்துப் போட முடியும். இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் என்று பார்க்கிறோம் (1தீமோத். 6:17) நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். (கொலோ 3:1-2) ஆம், நம்முடைய ஆண்டவர், ஒரு மனுஷனுடைய பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே தான் அவனுடைய இருதயமும் இருக்கும் என்றும் போதித்திருக்கிறார். நாம் பரலோகத்திலே பணத்தை சேர்த்து வைக்கும்படி அவற்றை சேர்க்க ஆசையுள்ளவர்களாயிருக்க வேண்டும். பணத்தை தேவனுடைய மகிமைக்காகப் பயன்படுத்துவதன் மூலமாக நாம் பரலோகத்திலே பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்க முடியும். சுவிசேஷ வேலைக்காக, திக்கற்றவர்களுக்காக, வேதாகமப் பள்ளி நடத்துவதற்காக மற்றும் வேறுசில நற்கிரியைகளுக்காக கொடுக்கப்படும் ஒருவ்வொரு ரூபாயும் பரலோகத்திலே சேர்த்து வைக்கப்படுகிற ரூபாயாக இருக்கிறது.

3. ஒழுக்கக்கேடான காரியங்களில் பணத்தை கெடுத்துப் போட முடியும். இதை நாம் இரண்டு வழிகளில் செய்கிறோம். வெட்கத்திற்குரிய காரியங்களில் பணத்தை செலவழிப்பதன் மூலம் நாம் கெடுத்துப் போடுகிறோம். நீங்கள் உங்கள் வருமானத்தில் 50 சதவீதத்தை, 75 சதவீதத்தை, அல்லது 99 சதவீதத்தை கர்த்தருக்கு கொடுப்பதாக இருந்தாலும், மீதமுள்ள அந்த 50 சதவீதத்தை 20 சதவீதத்தை அல்லது 1 சதவீதத்தை வெட்கப்படக் கூடிய காரியத்திற்கு செலவழிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை. சொல்லப்போனால், நம்மிடம் இருக்கும் 100 சதவீதத் திற்கும் தேவன் நம்மிடம் கணக்கு கேட்பார். நம்மிடம் இருக்கும் ஒவ்வொரு பணமும் கனமுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். சிலர் தங்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கும் போது மீதமானவைகளை தங்கள் விருப்பம் போல் பயன்படுத்த சுதந்திரம் பெற்றிருப்பதாக நினைக்கிறார்கள். இந்த உலகத்தில் நாம் பெற்று அனுபவிக்கும் காரியங்களைக் குறித்து நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, நம்முடைய பணத்தை பயன்படுத்த மறுப்பதன் மூலமாக நாம் பாவம் செய்யலாம். அநேக மக்கள் எவ்வித சந்தேகமுமின்றி மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும் இந்த காரணத்திற்காக இழந்து போவார்கள். இதே காரியத்தை தான் யாக்கோபு 5:1-6 வசனங்களில் பேசுகிறார். நமக்கு வாய்ப்பு இருக்கும் போது கர்த்தருடைய வேலைக்கென்று கொடுக்க மறுத்தால் அது நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு விரோதமாக சாட்சி கொடுக்கும். ஒரு தாலந்து கொடுக்கப்பட்ட மனிதன் பணத்தை தவறாக பயன்படுத்தியதற்காக வெளியே தள்ளப்பட்டான். நியாயத்தீர்ப்பு நாளிலே தங்களுடைய பணத்தை தேவனுடைய நாம மகிமைக்காகப் பயன்படுத்தாமல் இருந்ததற்காக எத்தனை பேர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்? நியாயத்தீர்ப்பு நாளிலே உலகத்தின் பெரும்பகுதி இதற்குள் வந்து நிற்பதை நினைத்து நடுங்குகிறேன். நாம் ஐசுவரியவான்கள் அல்ல என்று சொல்லி நாம் தப்பிக் கொள்ளவோ சாக்குபோக்கு சொல்லவோ முடியாது. இதுதான் ஒரு தாலந்து கொடுக்கப்பட்ட மனிதன் செய்த அழிவுக்கேதுவான தவறு.

**IV பேராசை என்கிற பாவம்**

பேராசை என்பது மனிதன் அறிந்திருக்கிற அசிங்கமான பாவங்களுள் ஒன்றாகும். பேராசை என்பது ஒருவருக்குப் பசியே இல்லாத போது, சாப்பிடுகிற ஒரு குழந்தையின் வாயிலிருந்து ரொட்டியைப் பிடுங்குவதாகும். பணக்காரனுடைய பேராசை ஒரு ஏழைக்குத் தன்னுடைய வருமானத்திலிருந்து குடும்பத்தை பராமரிக்கும் கடமையிருக்கும் போது, அந்த ஏழையை திவாலாக்கி, தன்னுடைய அழிந்து போகும் பொக்கிஷத்தில் மேலும் பணத்தைச் சேர்க்க அந்த ஏழையிடமிருந்து பிடுங்குவதைத் தான் குறிக்கிறது. இந்த பேராசை தான் கேயாசியை நான்

அவன் பிறகே ஒடி, அவன் கையிலே ஏதேனும் வாங்குவேன் என்று சொல்லத் தூண்டியது. இந்த பேராசையினால் தான் கேயாசிக்கு குஷ்டரோகம் பிடித்தது. (2 இராஜா 5:20) பேராசை தான் ஆகானை திருடத் தூண்டியது. (யோசுவா 7:21) இந்த பாவத்திற் காகத் தான் ஆகான் தண்டிக்கப்பட்டான். பேராசை என்னும் பாவம் செய்பவர்களை தேவன் குஷ்டரோகத்தினாலே, மரணத் தினாலோ இப்போது அடித்தால் நிலைமை எப்படி இருக்கும்? சகோதரர்களே, பேராசை என்கிற பயங்கரமான பாவத்தைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்தால் நலமாயிருக்கும்.

புதிய ஏற்பாட்டின்படி கர்த்தருக்கு கொடுத்தலை மீட்டமைக்க நீங்கள் உதவி செய்வீர்களா?

சுவிசேஷ வேலைக்காக அதிகமாகக் கொடுங்கள்

தேவனுடைய செய்தியை இழந்து போனவர்கள் கேட்பது அவசிய மாயிருக்கிறது.

காணிக்கை உதாரத்துவமாய் கொடுங்கள்.

மகிழ்ச்சியுள்ள இருதயத்தோடு தேவன் விரும்புகிறபடி கொடுங்கள்.

(தொடரும்) ✝

## நாளும் நடப்பும்

1. விலைவாசி உயர்வு மத்திய, மாநில அரசுகளை நெருக்கடியில் தள்ளியிருக்கிறது.
2. உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியே ஊழல் புகாருக்கு உள்ளாகியிருப்பது ஒட்டுமொத்த நீதித்துறைக்கு அவமானம்.
3. தனித் தெலுங்கானா போராட்டம் ஆந்திரா அரசுக்குப் பெரும் தலைவலி.
4. எல்லா நகரங்களிலும் மாணவர்களுக்கு தனிப் பேருந்து விட தமிழக அரசு பரிசீலனை.
5. சீனத்தின் 258 நகரங்களில் அமில மழை.
6. இந்தியக் கிரிக்கெட் அணி தெ.ஆ. தொடரை சமன் செய்து முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

# வேதாகமம் வாசிப்பதற்கு நேரத்தைக் கண்டுபிடிக்கப் பன்னிரெண்டு வழிகள்

1. ஒவ்வொரு காலையிலும் பத்து நிமிடம் முன்பாக எழுந்து வேதத்தை வாசியுங்கள்.
2. ஒவ்வொரு இரவும் தூங்கும் முன்பாக வாசிப்பதற்கு சுலபமாய் வேதாகமத்தை அருகில் வையுங்கள்.
3. குறைவாகப் பேசுங்கள். அப்போது, உங்களுக்கு வாசிப்பதற்கு இன்னும் சில நிமிடங்கள் கூடுதலாகக் கிடைக்கும்.
4. தொலைபேசியில் அழைப்பிற்காகக் காத்திருக்கும் போது வாசிக்கும்படி கையில் வேதாகமத்தை வைத்துக் கௌ்ளுங்கள்.
5. உங்கள் பாக்கெட்டில் அல்லது பையில் வேதாகமத்தை வைத்துக்கொண்டால், மருத்துவருக்காக காத்திருக் கும் போதோ, சரியான நேரத்திற்கு வராதவர்களுக்காக காத்திருக்கும் போதோ வாசிக்க முடியும்.
6. வேதாகமம் இல்லாமல் எந்த ஒரு பயணத்தையும் ஒரு போதும் செய்ய வேண்டாம்.
7. நீங்கள பயணம் செய்யும் வாகனத்தில் உள்ள உறையில் வேதாகமத்தை எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள்.
8. தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு உங்கள் பிள்ளை களுக்கு வேதத்தை வாசித்துக் காட்டுங்கள்.
9. மத்தியான வேளையில் குடும்பமாக சேர்ந்து சாப்பிடும் போது ஒன்று அல்லது இரண்டு வசனங்களை வாசியுங்கள்.
10. அன்றாடம் நான் வேதம் வாசித்தே தீருவேன் என்று தீர்மானம் எடுத்து, அதிலே உறுதியாயிருங்கள்.
11. ஆர்வம் உண்டாகும்படி வேதத்தை முறைப்படுத்தி வாசியுங்கள்.
12. எல்லாவற்றிற்கும் மேலாக வேதம் வாசிப்பதால், தேவன் நம்மோடு பேச அனுமதிக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தொடர் கட்டுரை

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 3. அன்பினால் சபை கட்டப்பட வேண்டும்

**தி**ருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே 2011 ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்கள் பல!

கிறிஸ்துவின் உபதேசத்தில் அன்பு என்பது கற்பனையின் பொருளாயிருக்கிறது. ஆகவேதான் அன்பின் பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. சபையானது சிமெண்ட், கல், மணல் போன்ற பொருட்களால் கட்டப்படாமல் **அன்பு** என்ற ஆவிக்குரியப் பொருளால் கட்டப்பட வேண்டும். அதுவே வசன ரீதியான கிறிஸ்துவின் சபையாகும். இதைக் குறித்து இந்த பாடத்தில் படிப்போம்.

### I அன்புக்கு இலக்கணம் தேவன்

நாம் பாவிகளாகவும், பெலவீனர்களாகவும், அக்கிரமக்காரர்களாகவும் இருக்கும் போது தேவன் தமது அன்பின் குமாரன் இயேசு கிறிஸ்துவை சிலுவையிலே மரிக்கச் செய்ததின் மூலமாக தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங் கப் பண்ணினார். (ரோமர் 5:6- 8) தேவனுடைய அன்பிற்கு எல்லை இல்லாதபடியால் இன்றும் நம்மை சுவிசேஷத்தினாலே இரட்சிக்கப்பட அழைக்கிறார். (2தெச. 2:14) தேவன் நம்மை நேசிக்கவில்லை என்றால் இன்று உலகம் முடிந்து போயிருக்கும். நாம் புத்தாண்டைக் கொண்டாடியிருக்க முடியாது. நமக்கு மீண்டும் ஒரு புத்தாண்டை கொடுத்திருக்கின்றார். அது எதற்காக? நாம் கெட்டுப் போகாமல் மனந்திரும்பி அவருடைய பிள்ளைகளாகும் படிக்கே கொடுத்திருக்கின்றார் (2பேதுரு 3:9). தேவனுடைய அன்பை இயேசு கிறிஸ்து சிலுவையில் தெரியப் பண்ணினார். (யோவான் 3:16) நாம் குற்றவாளிகளும், தேவனுக்கு விரோதமாக செயல்படுகின்றவர்களுமாய் இருக்கும் போது அவர் நம்மை நேசித்தார். அவர்தான் முதலில் நம்மிடத்தில் அன்பு கூர்ந்தார். எதற்காக? நாம் பிழைக்கும்படிக்கே! (1யோ 4:9) அன்புக்கு முதலில் இலக்கணம் வகுத்தவர் தேவன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வுலகத்தில் நேசிக்கிறவரைத் தான் நேசிப்பார்கள். ஆனால், தேவன் நேசிக்காதிருந்த மனுக்குலத்தை நேசித்தார். அதனால் தான் அன்பு இவ்வுலகத்தில் உண்டானது. (1யோ. 4:10)

ஆதலால் தான் தேவன் அன்பாகவே இருக்கி றார் என்று அன்பின் சீஷன் யோவான் எழுதியிருக்கின்றார் (1யோ 4:8) அதாவது "God is Love" என்று எழுதியிருக்கின்றார். "Love is God" அல்ல அதாவது அன்பே கடவுள் அல்ல என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆனால், இவ்வுல கத்திலுள்ளவர்களில் அநேகர் அன்பே கடவுள் என்று நினைத்து செயல்படுகின்றனர். இது வருத்தமடையச் செய் கிறது நாம் தேவனிடத்தில் அன்பு கூருவது உண்மை என்றால் அவருடைய கற்பனைகளைக் கைக் கொண்டு, தேவனுடைய பிள்ளைகள் அனைவரிடத்திலும் அன்பு கூற வேண்டும். (1யோ 5:1,2) அதாவது, அன்பினால் அவருக்குள் கட்டப்பட்டு வர வேண்டும். அன்பினால் கட்டப்படாதவன் தேவனை அறிய வில்லை அப்படிப்பட்டவன் தேவனால் பிறந்தவனல்ல. அன்பில் நிலைத்திருக் கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் (1யோ 4:16).

தேவன் நம்மீது வைத்துள்ள அன்பிற்கு கிரேக்க வார்த்தை யில் "அகாபே" என்பது பொருளாக உள்ளது. இதன் அர்த்தம் (Agape) தேவன் தமது குமாரனை மனுக்குலத்திற்காக சிலுவை யிலே கொடுத்தது. (ரோமர் 5:8). இந்த அன்பானது மற்றவர் களின் தேவையை மாத்திரம் நிறைவேற்றும் தன்மை கொண்டது. தேவன் நம்மீது வைத்த அன்பானது இந்த வகையைச் சேர்ந்தது. (Agape) நாம் இந்த அன்பை தான் வெளிப்படுத்த வேண்டும் என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் வெளிப் படுத்தினார். (மத். 5,43-48). அதாவது, நாம் நம் விரோதிகளை நேசிக்க வேண்டும் என்பதே இந்த அன்பின் இலக்கணமாகும்.

## II அன்பினால் கட்டப்படாத சபை

வசன ரீதியான கிறிஸ்துவின் சபையானது, தேவ அன் பினால் கட்டப்பட வேண்டும். விசுவாசத்திலும், போதிப்பதிலும் சரியாக இருந்தாலும் அன்பு கூருவதில் குறைவு காணப்பட்டால் அந்த சபை வசன ரீதியான கிறிஸ்துவின் சபையாக இருக்க முடியாது. இயேசு கிறிஸ்து மீண்டுமாக தமது சபைக்காக வரும் பொழுது குறைவுள்ள சபையை தமக்கு முன்பாக நிறுத்திக் கொள்ளமாட்டார். பூரணமான சபையை தமக்கு முன்பாக நிறுத்திக் கொள்வார். (எபே. 5:27) விசுவாசத்திற்கும், பக்தி விருத்திக்கும் அடிப்படையாக அன்பு இருக்கிறது (1 கொரி. 8:1, கலாத். 5:6). எனவே நாம் அன்பினால் கூட்டிக் கட்டப்பட வேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியான். (1யோ. 4:8) அன்பினால் கட்டப்படாத சபையையும் தேவன் அறியமாட்டார்! எனவே, அன்பிலே குறைவுள்ளவர்களாக நாம் இருக்கக் கூடாது. அப்படிக் குறைவுள்ள வர்களாக இருந்தவர்களை நாம் அறிந்து கொள்வோம்.

ஆசியாவில் ஏழு பட்டணங்களிலிருந்த சபைகளில் ஒன்று தான், எபேசு பட்டணத்திலிருந்த சபை. அவர்கள் விசுவாசக் கிரியைகளிலும், உபதேச ரீதியிலும் வளர்ந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டார்கள் (வெளி. 2:4). ஆகவே, ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவர்களைக் குறித்து, ஆகையால், நீ இன்ன நிலைமையி லிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட் சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் என்று எச்சரித்தார். (வெளி. 2:5).

இன்றும் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்ட சபையை எச்சரிக்கின்றார். நம்மில் அநேகர் ஆதியில் கொண்டி ருந்த அன்பை விட்டுவிட்டு பல பிரிவுக்கூட்ட சபை களுக்குச் சென்றுவிட்டார்கள்! அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பி ஆதியில் கொண்டிருந்த அன்பை திரும்பவும் செய்ய வேண்டும் என்று இப்புத்தாண்டில் அழைக்கின்றார்.

ஆண்டவர் இயேசு நம்மில் சிலர் நம்மை விட்டுப் பிரிந்து போய் விட்டனர்! ஒரே அப்பத் திலும், திராட்ச ரசத்திலும் பங்கு பெற்ற வர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டார்கள் என்று குறை கூறுகிறார். அவர்களும் மனந்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார். புத்தாண்டை குதூகலத்துடன் கொண்டாடு பவர்களே மனந்திரும்பி குணப்படுங்கள். அப்பொழுது தான் அர்த்தமுள்ள புத்தாண்டாக இருக்கும்.

கிறிஸ்துவின் சரீரமாக இயங்கும் சபையானது கிறிஸ்துவின் அன்பை வெளிப் படுத்த வேண்டும். கிறிஸ்துவின் அன்பிற்கு பொறாமை இல்லை, தற்புகழ் இல்லை, இறுமாப்பு இல்லை, அயோக் கியமான காரியம் இல்லை, கோபம் இல்லை, பிறருக்கு தீங்கு நினைக்காது. (1கொரி. 13:1-7) கிறிஸ்துவின் அன்பானது சகலத்தையும் சகிக்கும் தன்மையுள்ளது. இப்படி அன்பின் குணங் களைக் கொண்டு சபை இயங்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பானது யாருக்கும் தீமை செய்யாது. பகை உணர்வை வெளிப்படுத்தாது. அவருடைய சபை இப்படிப்பட்டத் தன்மை களைக் கொண்டதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சபை, முகத்தை சுழிக்காமல் புருவத்தை உயர்த்தி ஆச்சரியப்படும்படி யாக இருக்க வேண்டும். புதிதாய் திருமணமான தம்பதியினர் ஒருவருக்கொருவர் காண்பிக்கும் அன்பு எல்லாரையும் ஈர்க்கக் கூடியதாக இருக்கும். பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டு பிரிந்து போகும் போது எவ்வளவு துன்பமும், அவமானமும் இருக்கும். அந்த தம்பதியினர் ஆதியில் கொண்டிருந்த அன்பை மீண்டும் காண்பித்து ஒன்று சேரும் போது எவ்வளவு

மகிழ்ச்சியும், சமாதானமும் இருப்பார்கள். அதுபோலவே, ஆதியில் கொண்டிருந்த அன்பை மீண்டும் நாம் காண்பித்து அன்பினால் கட்டப்பட வேண்டும் என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு உணர்த்துகிறார். இந்த புத்தாண்டில் மகிழ்ச்சியும், சமாதானத்தையும் நாம் பெற்றுக்கொள்ள ஆதியில் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துவோம். அன்பினால் கட்டப்பட்ட சபை யாக இருப்போம் பிரிவினைகளையும், அதை உற்சாகப்படுத்து கிறவர்களையும் உதறித்தள்ளுவோமாக! ஏனெனில், அன்பினால் கட்டப்படாமல் செயல்பட்டு வந்த எபேசு சபை இன்று இல்லை. அவர்கள் மனந்திரும்பாததினால் விளக்குத்தண்டை நீக்கி விட்டார். என்பதை உணர்ந்து சிந்தித்து செயல்படுவோமாக!

**III அன்பினால் உலகத்தை ஜெயிக்க முடியும்.**

தேவன் இந்த உலகத்தை அன்பினால் வென்றார். அவர் தமது குமாரனை சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்ததின் மூலமாக வெற்றி அடைந்தார். இந்த வெற்றி யைத்தான் இயேசு கிறிஸ்து சிலுவையில் வெற்றிச் சிறந்தார் என்று பவுல் குறிப்பிடுகிறார் (கொலோ 2:14,15) அதாவது கிறிஸ்து வின் வெற்றி தேவனின் வெற்றியாக இருந்தது. அதுபோலவே நாமும் கிறிஸ்துவின் அன்பினாலே இந்த உலகத்தை ஜெயங் கொள்ளுகிறவர்களாகயிருக்கிறோமே என்று பவுல் கூறுகின்றார். (ரோமர் 8:36,37) அதாவது, கிறிஸ்துவின் அன்பு மட்டுமே உலகத்தை ஜெயிக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படியென்றால் அன்பு என்ற சொல்லிற்கு பல அர்த்தங்கள் உள்ளது. இவ்வுல கத்தில் காணப்படுகின்ற அன்பு என்ற கிரேக்க வார்த்தை முதலில் "எப்பிதூமியா" **(Epithumia)** என்று உள்ளது இதன் அர்த்தம் இச்சை (காமம்) என்று புதிய ஏற்பாட்டில் உள்ளது. (மத். 5:28) இன்னொரு கிரேக்க வார்த்தை அன்புக்கு, "பிலியா" **(Phillia)** இதன் அர்த்தம், இன்னொரு கிரேக்க வார்த்தை அன்புக்கு பிலியா இதன் அர்த்தம் பெற்றோர் பிள்ளைகளிடத்தில் கூறும் அன்பு, பாசம் மற்றும் நண்பர்களிடத்தில் காட்டும் அன்பைக் குறிக்கிறது. இவ்வி ரண்டும் கிறிஸ்துவின் அன்பு இல்லை. இவ்வகையான அன்பு தான் அநேகரிடத்தில் உள்ளது. ஆதலால் தான், உலகத்தில் திருட்டு, கடத்தல், மது, மங்கை, சிசுக்கொலை போன்ற பாவங் கள் அதிகமாக இந்த நாட்களில் காணப்படுகின்றன! இந்த உலக அன்பு பூரணமற்றது

நாம் கிறிஸ்துவின் அன்பினாலே மட்டும் தான் இவ்வுல கத்தின் அன்பு, பாவம் போன்றவற்றை முற்றும் ஜெயங்கொள் ளுகிறவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவின் அன்பைக் குறித்து அதாவது, நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூரும் சகோதர அன் பைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் விளக்கும் போது வெள்ளைப் போளம், இலவங்கம், கருவாப்பட்டை ஆகிய

வைகளுடன் கலக்கப்பட்ட சுகந்த வாசனைத் தைலமாக இருக்கிறது என்று விளக்குகின்றார். (யாத். 30:23-33). இந்தக் கலவையானது பரிமள தைலமாகிய சுத்தமான அபிஷேகத் தைலமாயிருந்தது. ஆசாரியர் தவிர வேறு யாரும் இந்த அபிஷேகத் தைலத்தை பெறுவ தற்கு அனுமதிக்கப்படவில் லை. ஆசாரியர்கள் செய்யும் இந்த வாசனையானது சகோதர ஐக்கியத்தின் சுகந்த வாச னைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது (சங். 133:1-3) இன்று கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஆசாரியர்களாக இருக்கிறோம் (1 பேதுரு 2:9) நமது அன்பும், ஐக்கியமும் பரிமளத் தைலமாக இருக்க வேண்டும். நறுமணம் கமழும் பரிமள தைலமாக நமது கிறிஸ்தவ ஜீவியம் இருக்க வேண்டும். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம் (2கொரி. 2:15) அதாவது, கிறிஸ்துவின் அன்பு சுயநலமில்லாதது, பிறர் நலம் பேணும் அன்பாக உள்ளது. இப்படிப்பட்ட அன்பை தேவன் தமது குமாரன் மூலமாகக் கொடுத்தார். ஆதலால், அன்பின் குமாரன் இயேசு கிறிஸ்துவுக்கு அநேக உபத்திரவங்கள் உண்டாயின. சிலுவையில் அந்த அன்பை நிறைவேற்றினார். அதனால் உலகத்தை ஜெயித்தார். நாமும் அதே கிறிஸ்துவின் அன்பை இவ்வுலகிற்கு வெளிப்படுத்துவோம். அதனால் வரும் உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் வேறு எந்த உபத்திரவமோ வந்தாலும் கிறிஸ்துவின் அன்பினாலே ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். (ரோமர். 8:36-37).

(தொடரும்)

## கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் செய்யக்கூடாத காரியங்கள்

1. நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடக் கூடாது (அப்போஸ்தலர் 7:26).
2. நாம் ஒருவருக்கொருவர் குற்றவாளிகளென்று தீர்க்கக் கூடாது (ரோமர் 2:1,15)
3. நாம் ஒருவருக்கொருவர் விரோதமாய் இறுமாப்படையக் கூடாது (1 கொரிந்தியர் 4:6).
4. நாம் ஒருவருக்கொருவர் வழக்காடக் கூடாது (1 கொரிந்தியர் 6:1)
5. நாம் ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கக் கூடாது (கலாத்தியர் 5:15).
6. ஒருவரையொருவர் கோபமூட்டக் கூடாது. ஒருவர் மேல் ஒருவர் பொறாமைக் கொள்ளாக் கூடாது. (கலாத்தியர் 5:26)
7. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடக் கூடாது. (யாக்கோபு 5:9)

# "பூரண சற்குணராயிருங்கள்" மத். 5:43

யோசுவாசெல்வம்

ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள். (மத். 5:48) என்று கட்டளையிட்டுள்ளார். பூரண சற்குணராயிருங்கள்! மலைப்பிரசங்கம் தான் பிரசங்கிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் பிரசங்கமாக உள்ளது. இயேசு (மத். 5:7) மலைப்பிரசங்கத்தில் முன் வைக்கப்பட்ட வாழ்வின் வழி என்பது தான் வாழ்வதற்கான ஒரே ஒரு நடைமுறை வழியாக உள்ளது. நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று பாக்கிய வசனங்களில் இயேசு கூறினார். இன்றைய நாட்களில் மக்களுக்கு வாழ்க்கைக்கான தத்துவம் ஒன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. தேவனுடன் நமது அன்றாட நடையானது நமது வாழ்வில் இலக்கை தொடர்ந்து மறு வடிவமைக்கிறது.

ஒரு நபர் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதற்குக் கீழ்ப்படிகின்றார். அவர் இரட்சிக்கப்படுகின்றார். கிறிஸ்தவராகின்றார். தேவனுடைய சபையில் (கிறிஸ்துவின் சபையில்) சேர்க்கப்படுகின்றார். அந்தப் புதுப் பிறவிலிருந்து பின்வரும் கேள்விகள் அவரை உடமையாக்குகின்றன. கிறிஸ்தவராக இருத்தல் என்பதின் அர்த்தமென்ன? நான் யாராக இருக்க வேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும். நான் எவ்வாறு வாழ வேண்டும்? தேவனுடைய (பின்வரும்) தர அளவைக் குறைப்பதற்காக இயேசு வரவில்லை; பூரண சற்குணராயிருங்கள் என்ற இந்த வார்த்தை மலைப் பிரசங்கத்தில் உள்ள மிகவும் இன்றியமையாத கூற்றாக விளங்குவது. பூரண சற்குணராயிருங்கள் என்பதேயாகும். முன்னாள் உள்ள பாக்கியங்களும், பின்னால் உள்ள செயல் வகைகளும், இந்த சிந்தனையை விரிவாக்குகின்றன. நாம் பூரண மற்றவர்களாயிருக்கின்றோம். நமக்குள்ளாக நாம் யுத்தத்தில் ஜெயிக்க முடியாதவர்களாயிருக்கின்றோம். நாம் சிந்தித்துப் பார்க்கவும் துணிய முடியாத, தேவனுக்கு முன்பாகப் பூரண சற்குணராயிருத்தல் என்ற விஷயத்தை நாம் செய்யக்கூடும்படிக்குத் தேவன் செயல்படுகின்றார்.

பரிசேயன், தான் பிறரை விட மேன்மையானவன் என்று நினைத்தான் லூக் 18 கிறிஸ்தவர்கள் தேவனைப் போலிருக்கும் சிலாக்கியமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். என்ன ஒரு இலக்கு! எபேசியர்கள் தேவனைப் பின்பற்ற வேண்டும் என்று அவர்களுக்குப் பவுல் கூறினார் (எபே. 5:1) நான் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவனாக இருக்கின்றேன் (ஆதி. 1:26,27) தேவனைப் போலிருத்தல் என்பதே என் இலக்காக உள்ளது! பூரண சற்குணர் என்ற வார்த்தையை அர்த்தமற்றதாய் ஆக்கிவிடாதீர்கள் இயேசு தேவனைப் போல் சற்குணராயிருங்கள் என்று கூறினார். தேவன் தேவனாகவே இருக்கின்றார். அவர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்றிருக்கின்றார். பரிசுத்தமான தேவன். பூரணப்படாத எவருடனும் தொடர்பு கொள்வதில்லை. தேவனைப் பின் பற்றி நடப்பவர்கள் பூரணப்பட்டவர்களாக இருக்க வேண்டும்!.

பூரணப்படுதல் என்பது நமது இலக்காக உள்ளது! நமது இலக்கு என்ன என்பதே நம்மில் பலருக்கு தெரிவதில்லை. பூரணப்படுதல் என்பதே நமது இலக்காக உள்ளது. பூரணப்படுதல் என்பது விருப்பத் தேர்வாகவோ அல்லது குறைந்தபட்ச அளவானதாகவோ இருப்பதில்லை. பரலோகம் செல்லுதல் என்பது நமது இலக்கு அல்ல. பரலோகத்தை நமக்குள் கொண்டு வருதல் என்பதே நமது இலக்காக உள்ளது. பூரணப்படுதல் என்பது தான் எப்போதுமே தேவனுடைய இலக்காக இருந்துள்ளது. ஆதாம் இதில் தவறினார் (ஆதி. 3) நியாயப்பிரமாணம் மக்களைப் பூரணப்படுத்தவில்லை (எபி. 7:19- 10,1) பூரணப்பட்ட மனிதரான கிறிஸ்து பூரணமான பலியை செலுத்தினார். (எபி. 5:9-10,12,14) விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்குதல் என்பதே தீர்வு என்று எபிரெயருக்கு எழுதிய நிருபம் கூறுகிறது (எபி. 12:1) செல்வந்தனும், இளைனுமாயிருந்த ஒரு அதிகாரியிடத்தில் இயேசு பூரண சற்குணராயிருத்தல் எவ்வாறு என்று கூறினார். (மத். 19:21)

பூரண சற்குணராயிருத்தல் என்ற கருத்து. பல்வேறு வடிவங்களில் புதிய ஏற்பாட்டில் முப்பது முறைகளுக்கு மேல் காணப்படுகிறது. அவற்றில் சுமார் பன்னிரண்டு முறைகள் மட்டுமே ஊக்குவிக்கப்படுகின்றோம். பகுதி கிறிஸ்தவம் என்று ஒன்றுமில்லை. பூர்ண சற்குணராயிருத்தல் என்பதே பவுலின் விருப்பமாக இருந்தது. (பிலி. 3:12- 15) அவர் அடைந்திருந்ததில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணத் தன்மையுள்ளவராக ஒவ்வொரு மனிதரையும் முன்னிருத்துதல் என்பதே பவுலின் விருப்பமாக இருந்தது. (கொலோ. 1:27-28) வேத வசனங்கள் தேவனுடைய மனிதரை தேறினவராக்குகிறது. (2 தீமோ. 3:15,17) நாம் சகலவித நற்கிரியைகளிலும் சீர் பொருந்தினவர்களாம்படி தேவன் விரும்புகின்றார். (எபி. 13:21) அன்பு என்பது பூரண சர்குணத்தின் கட்டாக உள்ளது. (கொலோ. 3:14) தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவ அன்பு மெய்யாய்ப் பூரணப்பட்டிருக்கும் (1யோ 2:5) சகோதரர்கள் தேறினவர்களாகவும் பூரண நிச்சயமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். (கொலோ. 4:12) கீழ்ப்படிதலுள்ள செய்கைகள் விசுவாசத்தை பூரணப்படுத்துகிறது. (யாக். 2:22) பூரணப்பட்டவர்களாகவும் இருத்தல் என்பதே கிறிஸ்தவ வாழ்வின் இலக்காக உள்ளது. தேவன் மாத்திரமே நம்மை பூரணப்படுத்துகிறார்.

தேவன் மாத்திரமே உடைந்து போன, உதவியற்ற, பலவீன மான மனிதர்களிடம் செயல் படுகின்றார் என்பது முரண்பாடு போல் தோன்றுகிற மெய் யுரையாக உள்ளது. என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பயம் பூரணமாய் விளங்கும் (II கொரி. 12:9) எனக்குள் உள்ள தேவன் பூரண ராயிருக்கின்றார். எனக்குள் உள்ள கிறிஸ்து பூரணமாய் இருக்கின்றார். எனக்குள் உள்ள பரிசுத்த ஆவியானவர் பூரணராயிருக்கின்றார். ஆகவே, நானும், நீங்களும், தேவனுடையப் பிள்ளைகள் யாவரும் பூரண சற்குணராயிருப்போம். ஆமென்! ✝

## கிருபையுள்ள வார்த்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. **பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| இமயம் | TV | சனி | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

## கிறிஸ்துவின் வசனம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **அர்ச்சுனன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| இமயம் TV | செவ்வாய் | காலை | 6:15 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் சத்தம்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர்

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.